**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,</u>**

**<u>விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்</u>**

**MCOP.No:** 161/2020 நாள் 05.02.2024

ம.சா.1, திருமதி.பாக்கியலட்சுமி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

விபத்தில் இறந்தவர் இராஜகுரு எனது மகன்.TN84F9298 ஸ்பௌண்டர் பிளஸ் இருசக்கர வாகனம் தான் வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனம் என்றால் சரிதான். மேற்படி இருசக்கர வாகனத்திற்கு 1ம் எதிர்மனுதாரர்தான் உரிமையாளர் என்றால் சரிதான். மசாஆ-6 பிரேத பரிசோதனை சான்றிதழில் தலைகாயத்தினால் ஏற்பட்ட இரத்த போக்கினாலும் மூளையில் ஏற்பட்ட பாதிப்பினாலும் இறப்பு ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது மகன் தலைகவசம் அணியவில்லை என்றாலும் எனவேதான் அவரது தலையில் காயங்கள் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்து நடைபெற்ற போது என் மகன் இராஜகுருவின் வயது 21 என்றால் சரிதான். இறந்த எனது மகன் சென்னையில் இரயில்வே துறையில் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்து வந்தார் என்றால் சரிதான். மேற்படி வேலை தற்காலிகமான வேலை என்றால் சரிதான். எனது மகன் இரயில்வே துறையில் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்தது தொடர்பாக நியமன உத்தரவு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது மகன் இரயில்வே துறையில் ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக வேலை செய்ததால் நிரந்தர வருமான இழப்பு ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் கோரியுள்ள இழப்பீடு மிகவும் அதிகம் என்றால் சரியல்ல.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 05th day of February 2024.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,
திருவில்லிபுத்தூர்.